# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 10 புதன்கிழமை (26-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:304


# திருமலைத் துறைமுகம் அமெரிக்கப் பாவனைக்கு?

## ஆப்கான் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்த இலங்கை அனுமதி

கொழும்பு,செப்ரெம்பர்26

**ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகிவரும் தற்போதைய நிலையில், திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கப் படைகளின் பாவனைக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.**

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவதற்கு வேண்டிய சகல விதமான ஒத்துழைப்பையும் தான் வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தது. இது தொடர்பாகத் திட்டவட்டமான ஏற்பாடுகள் இருதரப்பினராலும் பரஸ்பரம் செய்து கொள்ளப்படும் என்றும் இலங்கை வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்காவின் வேண்டுகோளின் பேரில் இலங்கை அரசு வழங்க முன வந்துள்ள ஒத்துழைப்பின் ஒரு பகுதியாகவே திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிக்கும் திட்டம் கருதப்படுகின்றது.

திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள கடற்படைத் தளத்தை அமெரிக்கக் கடற்படை பயன்படுத்த அனுமதிக்கப்படும் எனத் தெரிகின்றது.

இது விடயத்தில் அமெரிக்காவின் கோரிக்கைக்கு இலங்கை அரசு உத்தியோகபூர்வமாகப் பச்சைக்கொடி காட்டிவிட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3)

## களுத்துறை சிறைக் கைதிகள் உண்ணா நோன்பு

கொழும்பு,செப்.26

களுத்துறை சிறைச்சாலையில் உள்ள சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுமுன்தினம் முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அங்கிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் திடீரென கொழும்பு மஹசீன் சிறைக்கு மாற்றப்பட்டதை ஆட்சேபித்தே இப்போராட்டம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## திலீபன் நினைவு நாள் இன்று

வவுனியா,செப்.26

இந்திய அரசுக்கு எதிராக அஹிம்சை வழியில் - உண்ணாநோன்பிருந்து - உயிரைத் தியாகம் செய்த செம்மல் லெப். கேணல் திலீபனின் 14 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

நினைவு தினத்தையொட்டி வன்னி மற்றும் மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உண்ணாவிரதம், சிரமதானம், பொதுக்கூட்டங்களுடன் பல்வேறு எழுச்சி நிகழ்வுகளுக்கும் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

வன்னிப் பகுதி மக்கள் கடந்த 10 தினங்களாக திலீபனின் உருவப் படங்கள் வைத்து மலர் அஞ்சலி செய்து வருவதாகவும் முக்கிய இடங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருவதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

வன்னியில் இம்முறை மக்கள் மிகவும் எழுச்சிபூர்வமாக தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

திலீபனின் நினைவாக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் யாழ். நகரப் பகுதி மற்றும் நல்லூர், கல்வியங்காடு, கொக்குவில், திருநெல்வேலி, அச்சுவேலி, பருத்தித்துறை போன்ற பகுதிகளிலும் விநியோகப்பட்டதாகவும் -

சில இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் - கூறப்பட்டது. (க-3)

## மாணவரை விடுவிக்கக் கோரி வவுனியா பாடசாலைகளில் பகிஷ்கரிப்புப் போராட்டம்

வவுனியா,செப்.26

வவுனியா மகாவித்தியாலய உயர்தர வகுப்பு கணக்கியல்துறை மாணவனான தங்கவடிவேல் இன்பகரன் (வயது 18) என்பவரைக் கைது செய்ததைக் கண்டித்தும் -

அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் -

வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளின் மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

மாணவர்களின் பகிஷ்கரிப்பு இன்றும் தொடரும் என்று மாணவர் தரப்பு அறிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து கடந்த வெள்ளியன்று வவுனியா வந்த பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸார் பிரஸ்தாப மாணவனை அவரது வீட்டில் வைத்துக் கைது செய்து விசாரணைகாக கொழும்புக்கு அழைத்துச் சென்றிருப்பதாகக் கூறப்பட்டது. (க-3)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐ.தே.கட்சி இன்று கையளிப்பு

### அதில் ஒப்பமிட தமிழர் கூட்டணி பின்னடிப்பு

கொழும்பு,செப்.26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை புதிதாக மீண்டும் இன்று ஐ.தே.கட்சி, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கவிருக்கின்றது.

இந்தப் பிரேரணையில் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு இருப்பதாகவும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தப் பிரேரணையில் ஒப்பமிடுவதற்குப் பின்னடிப்பதாகவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரேரணையில் ஒப்பமிடுவது தொடர்பாக, ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவருடன் தொடர்பு கொண்டதாகவும் -

சுயாதீன ஆணைக்குழுக்களையெல்லாம் அரசு நியமிக்க முன்வந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை, பெங்களூரில் நேற்றிரவு நில அதிர்வு!

சென்னை,செப்.26

தமிழகத்தில் சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் பெங்களூரில் நேற்றிரவு 8.20 மணிக்கு (இலங்கை நேரம் 8.50 மணிக்கு) நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

திருப்பதி, செங்கல்பட்டு போன்ற பகுதிகளில் 15 விநாடிகள் காணப்பட்ட இந்த அதிர்வினால் கட்டடங்கள் ஆடியதாகவும் -

மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் வீழ்ந்து குப்புறப்படுத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த அதிர்வு 5.8 றிச்சடர் எனப் பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வால் சேதங்கள் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. - (க-3-9)

## மணலாறுப் பகுதியில் புலிகள் தாக்குதல்

கொழும்பு,செப்.26

மணலாறுக்கு வடக்கே இரணவெவ என்னும் இடத்தில் அமைந்துள்ள படையினரின் நிலை மீது நேற்றுமுன்தினம் நண்பகல் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டதாகவும் -

இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

## புரிந்துணர்வு உடன்பாடு குறித்து உலக வங்கி பெரிதும் கவலை

கொழும்பு,செப்.26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஜே.வி.பியுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்பாடு குறித்துத் தனது கவலையை உலக வங்கி முதல் தடவையாக வெளியிட்டிருக்கின்றது.

உலக வங்கி, இலங்கை வழங்கியுள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடர்பாக சிபார்சுகளை இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின் ஷரத்துக்கள் எந்த வகையில் பாதிக்கும் என்பதே எமது கவலை என உலக வங்கியின் உயரதிகாரியான நரேஷ் துரைசாமியும், இலங்கை நாட்டிற்கான பிரதி இயக்குநரான பார்ட் ஹேபார்ட்டும் தெரிவித்தனர்.

இந்த உடன்பாட்டின்படி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விவசாயக் கடன்கள் அனைத்தையும் அரசு ரத்துச் செய்யவேண்டும். இந்த விடயமே உலக வங்கியை அதிக கவலையடைய வைத்திருக்கின்றது. ஆனால் இந்த விவகாரம் நிறைவேற்றப்படமாட்டாது என்று அரசு உலக வங்கிக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் புலிகள் மீதான தடையை இந்தியாவும் நீக்க வேண்டும்

### நெடுமாறன் கோரிக்கை

சென்னை,செப்.26

"அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாட்டைத் தொடர்ந்து இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்" என்று தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

சர்வதேச பயங்கரவாத இயக்கங்களுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்க்க முடியாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நிலையில் இருந்து அமெரிக்கா மாறவில்லை - இவ்வாறு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். இதனை நான் மிகவும் வரவேற்கின்றேன். இதன்மூலம் குறிப்பிட்ட சில நாடுகளைச் சேர்ந்த தீவிரவாத இயக்கங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட இயக்கமாக புலிகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.தூதரகத்தில் தளுவத்த அஞ்சலி

கொழும்பு,செப்.26

அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த படையினர் மற்றும் பொதுமக்களை நினைவு கூரும் நிகழ்ச்சி நேற்றுக்காலை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் றொஹான் தளுவத்த மற்றும் முப்படைகளின் தளபதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (க-3)

## காத்தான்குடி வாவியில் மீனவர்களை நோக்கிச் சூடு

### காயமுற்ற ஒருவர் மட்டு. ஆஸ்பத்திரியில்

மட்டக்களப்பு,செப்.26

காத்தான்குடி வாவியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி இனந்தெரியாதோர் நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை - ஏறாவூர் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மேச்சலுக்குச் சென்ற மாடுகள் சில காணாமற் போனதாகவும் -

அதன் எதிரொலியாக அந்தப் பகுதியில் இருந்து ஏறாவூர்ப் பகுதிக்கு விறகுவெட்ட வந்த ஒருவர் தாக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

### சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்க மட்டும் இணக்கம்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தேசியக்கட்சிகள் ஏன் பின்னடிப்பு?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம்,செப்.26

சுதந்திர ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு இணக்கம் கண்ட தேசியக் கட்சிகள், தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உடன்பாடு ஒன்றை எட்ட ஏன் தயக்கம் காட்டுகின்றன?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்

நேற்று அவர் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கேள்வி எழுபப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அதிகாரப் பரவலாக்கலின் ஒரு பகுதியாக சுயாதீன ஆணைக் குழுக்களிடம் நிறைவேற்று அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு வழி ஏற்படுத்தும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கான நாடாளுமன்றம் அங்கீகரித்தமை, வீடு பற்றிஎரியும் வேளை முற்றத்தைக் கூட்டுவதைப் போன்றது ஒன்றே ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கருதுகிறது.

நாட்டின் தலையாய பிரச்சினையாகிய தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பதில் உடன்பாடு காணாத இப்பெரும்பான்மைக் கட்சிகள் புதிய அரசியல் கலாசாரம், ஜனநாயகப் பாரம்பரியம் என்ற கோஷங்களுடன் தமக்குள் அதிகாரப் பகிர்வை நோக்காகக் கொண்டு ஒற்றுமையுடன் செயற்படுவதாகத் தோன்றுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் 18 வருடங்களாக ஓர் உட்பாட்டுக்கு வரமுடியாத இம் மூன்று பெரும்பான்மைக் கட்சிகளும் தங்கள் நலன்களைப் பேணும் நோக்குடன் வெறும் 18 நாள்களுள் உடன்பாடு ஒன்றைக் கண்டுகொண்டதானது இக்கட்சிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வில் உண்மையான அக்கறை இல்லை என்பதையே கோடிட்டுக் காட்டுகிறது.

நாட்டைக் கொதி நிலையில் வைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று எட்டப்படாமல் அமைக்கப்படும் எந்த ஓர் ஆணைக்குழுக்களாலோ அல்லது வேறு தீர்மானங்களாலோ நாட்டில் அமைதியையோ ஜனநாயகத்தையோ கொண்டுவந்து விட முடியாது என்ற யதார்த்தத்தைக் கருத்திற்கொண்டு, பெரும்பான்மைக் கட்சிகள் இந்தப் 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் ஓர் உடன்பாட்டை எட்டியதுபோல் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விலும் காலம் தாழ்த்தாது தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையிலான உடன்பாடு ஒன்றைக் கண்டு நாட்டை அழிவுப் பாதையிலிருந்து மீட்கவேண்டியதன் அவசியத்தை எமது கட்சி வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (க-3)

# குடாநாட்டு விவசாய உற்பத்திகள் மன்னார் ஊடாக தென்னிலங்கைக்கு!

## அனுப்ப ஏற்பாடு நடக்கிறது என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,செப்.26

குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைத் தென்பகுதியில் சந்தைப்படுத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக இங்கிருந்து விவசாய உற்பத்திகளை மன்னாருக்கு கடல் மார்க்கமாக அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு பேசும்போது கூறியதாவது:-

குறிகாட்டுவானில் இருந்து மன்னாருக்கு படகுசேவை மேற்கொள்வது உட்பட யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறி மற்றும் புகையிலை, வெங்காயம் போன்ற பணப் பயிர்களை ஏற்றுவதற்கான போக்குவரத்துச் சேவைகளை இப்போதைக்கு இலவசமாக எம்மால் செய்துதர முடியும். அத்தோடு இந்நடவடிக்கைகளால் ஆரம்பத்தில் ஏற்படும் நஷ்டங்களையும் அமைச்சு பொறுப்பெடுக்கலாம்.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாய சங்கங்கள் முன்வர வேண்டும். விவசாயிகளின் சங்கங்கள் மூலம் அவ்வப் பிரதேசங்களில் கொள்வனவுகள் செய்யப்படும் விவசாய உற்பத்திகளை அனுபபிவைக்கும் செயற்பாடுகளை அவர்களே செய்ய வேண்டும். நாம் இதற்கு பக்கத் துணையாக இருப்போம் - என்றார்.

இக்கலந்துரையாடலில் அரச அதிபர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் உட்பட விவசாயத்துடன் தொடர்புடைய பல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பல விவசாயிகள் தத்தமது பகுதிகளிலுள்ள பிரச்சினைகள்பற்றி எடுத்துக் கூறினர். (க-ரி)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

26.09.2001




செல்வன் சுரேந்திரன் மீனலஷ்ஷன்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு.திருமதி சுரேந்திரன் - நித்தியகலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மீனலஷ்ஷன் இன்று (26.09.2001) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை டுபாயில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அக்கா மீனஹர்னி, பெரியப்பாமார் மற்றும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இருக்கும் அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமாமார், அத்தைமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வன் மீனலஷ்ஷனை யாழ்.ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல்:
ரவி மாமா,
சுப்பஸோ வீடியோ, யாழ்ப்பாணம்.

(C-18394)


### விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்ப்பாணம், முற்றவெளி முனியப்பர் கோயில் பகுதியில் நேற்று இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து வந்தவரான புலோலி தெற்கைச் சேர்ந்த கந்தசாமி சற்குணம் (வயது57) என்பவரும், மற்றைய மோட்டார் சைக்கிளைத் செலுத்தி வந்தவரான சங்கானையைச் சேர்ந்த சிவகுருநாதன் கோபாலசிங்கம் (வயது42) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-15)

### தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம்,செப்.26

கபபலில் இருந்து அரிசி மூடைகளை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் அரிசி மூடை 'அடுக்கு' சரிந்து விழுந்து அதில் அகப்பட்டுக் காயமடைந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த துறைமுகத் தொழிலாளியான சண்முகம் நகுலேஸ்வரன் (வயது38) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

குடும்பத்தகராறில் குறுக்கிட்ட கணவனின் சகோதரர், கொட்டன் தடியால் அடித்துத் தாக்கியதில் மனைவி தலையில் படுகாயமடைந்தார்.

இணுவிலில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரபாகரன் பிரேமரஜனி (வயது23) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார். (க-15)

## இலக்கியவிழா ஒத்திவைப்பு

திருகோணமலை,செப்.26

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29ஆம், 30ஆம், அடுத்த மாதம் முதலாம் திகதி திருகோணமலையில் இடம்பெறவிருந்த தமிழ் இலக்கிய விழா பிற்போடப்பட்டுள்ளதாக அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெறும் கூட்டத்தில் இந்த விழா நடைபெறும் புதிய திகதிகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-3)

## செய்திக் கொத்து

### குடாநாட்டில் நேற்று மழை!

யாழ்ப்பாணம்,செப்.26

குடாநாட்டில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நேற்றுப் பரவலாக இடிமின்னலுடன் கூடிய கனத்த மழை பெய்தது.

அதிகாலை முதல் நண்பகல் வரை பெய்த கடும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இதனால் நேற்று பொதுமக்களின் வழமையான பணிகள் பாதிக்கப்பட்டன. (க-3-139)

### அளவெட்டியில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.26

'மௌன தவமுனிவர் பொ.கைலாசபதியின் வாழ்வும் சிந்தனையும்' என்னும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் பண்டிதர் க.நாகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அருட்கவி சி.விநாசித்தம்பி, ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோரின் சிறப்புரை, இளைப்பாறிய அதிபர் ஆ.சபாரத்தினத்தின் வெளியீட்டுரை, சைவப்புலவர் ஆ.செல்லத்துரை, க.சிற்றம்பலம் ஆகியோரின் நூல் விமர்சனம் ஆகியன இடம்பெறவுள்ளன. (க-3)

### வங்கி ஓய்வூதியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.26

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கியின் வலய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயப்படவிருக்கின்றது. (க3)

### கிணற்றில் விழுந்து குழந்தை மரணம்

கிணற்றில் வறி விழுந்து இறந்துவிட்டதாகத் தெரிவித்து 2வயது ஆண் பிள்ளையின் சடலம் ஒன்று நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

காக்கைதீவில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கண்ணன் அஜந்தன் (வயது2) என்ற ஆண் குழந்தையே மரணமானது.

மத்தியான வேளை சோற்றைக் கிள்ளிக் கையில் கொடுத்துவிட்டு, மற்றொரு கைக்குழந்தையை தாய் கவனித்துக்கொண்டிருந்த சமயம் வெளியே சென்ற இந்த 2வயதுப் பிள்ளை கிணற்றில் தவறிவிழுந்து மரணமானதாகக் கூறப்பட்டது.

நேற்று இடம்பெற்ற மரணவிசாரணையை அடுத்து குழந்தையின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வாரத்தில் இவ்வாறான 3 மரணங்கள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-15)

### வல்லிபுரத்தில் மக்கள் வங்கி விசேட பீடம்

நெல்லியடி,செப்.26

பருத்தித்துறை மக்கள் வங்கியின் விசேட கருமபீடம் ஒன்று ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தின் இறுதி நான்கு நாள்களிலும் அங்கு இயங்க உள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ள விசேட கருமபீடத்தின் போது வனிதா வாசனா, நிலையான வைப்பு மற்றும் ஜெயசிறி அதிர்ஷ்டக் கணக்குகளான சேமிப்பு, சிசு உதான, இசுறு உதான, ஜனஜய கணக்குகளும் ஆரம்பித்து வைக்கப்படுவதுடன், சிசு உதான கணக்குகளுக்கான 2001ஆம் ஆண்டுக்குரிய பரிசுகளும், இக் கருமபீடத்தில் வழங்கப்படும் என்று மக்கள் வங்கி பொது முகாமையாளர் பொ.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-109)

### சந்நிதியான் வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.26

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 'ஞானச் சுடர்' மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

இந்த நூலுக்கான வெளியீட்டுரையை லயன் கே.செல்வரத்தினமும் மதிப்புரையை சமூகஜோதி கா.கணேசதாசனும் நிகழ்த்தவுள்ளனர். (க-4-173)

### மின் இணைப்பு பயிற்சி நெறி

நவாலி,செப்.26

ஸ்ரீ லங்கா தொழிற் பயிற்சி அதிகார சபை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக நடத்தும் மின் இணைப்புப் பயிற்சி நெறியின் புதிய பிரிவு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியினைக் கற்க விரும்பும் 8ஆம் வகுப்பில் சித்தியடைந்தவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இயங்கும் கிராமியத் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அந்த நிலையப் பொறுப்பாளரும் போதனாசிரியருமான வே.சிறீகுகன் கேட்டுள்ளார்.

6மாத காலம் இடம்பெறும் இப பயிற்சிக்கு ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் 450ரூபா வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.(ம-100)

### முதியவர்களுக்கு விருது வழங்க ஏற்பாடு

நவாலி,செப்.26

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி முதியோர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்படும் தினத்தில் இனிமேல் அவர்களுக்கு விருது வழங்கிக கௌரவிப்பதற்கும் சமூக சேவைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்விருதினை 90 வயதுககும் 100 வயதுக்கும் இடைப்பட்ட, நாட்டிற்கு பல வழிகளிலும் சேவையாற்றியவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றிய விவரங்களை உடன் திரட்டி அனுப்புமாறு பிரதேச செயலர்களை வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களம் கேட்டுள்ளது. (ம-100)

### யோகாசனப் பயிற்சி

நெல்லியடி,செப்.26

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் உடல், உள, நலமேம்பாடு கருதி, பருத்தித்துறை 'யோகா மார்சல் ஆட்ஸ் கிளப்' அனுசரணையில், யோகாசனக் கண்காட்சி கடந்த 21ஆம திகதி தும்பளையில் இயங்கும், நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி பாடசாலை அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்காண்காட்சியில், யோக ஆசான் அமரர் செல்லக்கிளி மாஸ்டரின் மாணவன் தே.தேவராஜேந்திரன், பயிற்சிகளைச் செய்து காண்பித்தார்.

இந்த யோகாசனக் கண்காட்சி, மேலும் பல பாடசாலைகளிலும் காண்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-109)

### கலாசார விழா

நவாலி,செப்.26

வலி.தென் மேற்கு கலாசார பேரவையினர் நடத்தும் கலாசார விழா எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் 7ஆம் திகதிகளில் கலாசார பேரவைத் தலைவரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருமான தா.வேதநாயகன் தலைமையில் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (ம-100)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.அரச கட்டடத் திணைக்கள தொழிற்சங்க ஊழியர்களாகிய எமக்குப் பல வருடங்களாகக் கிடைக்கப்பெறாதிருந்த பல உரிமைகளைப் பெற்றுத்தந்தும் இன்னும் பல கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு ஆவனசெய்து கொண்டும் இருக்கின்றவர்களான



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான கௌரவ

**கா.வே.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளருமான

உயர்திரு.**க.மணிபல்லவராஜன்** (நிஷாந்தன்) அவர்களையும்

*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.*

- யாழ்.அரச கட்டடத் திணைக்கள தொழிற்சங்க ஊழியர்கள், யாழ்.மாவட்டம்.

*36, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* (92665)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 23 - 08 - 1941

உதிர்வு 27 - 08 - 2001

### திருமதி
### புஷ்பதேவி விவேகானந்தன்

*அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்*
*அமைதியின் திருவுருவாய் இருந்த*
*எங்கள் குடும்பக் குலவிளக்கே!*
*நீங்கள் மறைந்தாலும்*
*உங்கள் அன்புருவம் எம் நெஞ்சைவிட்டு மறையாது!*

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

மு.விவேகானந்தன்
**S.Creaston way,**
**Worcester Park,**
**Surrey CR 4ins,**
**U.K.**
(92663)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 - 06 - 1906

உதிர்வு 28 - 08 - 2001

### அமரர் செல்லப்பா குமாரவேலு
*(மலாயன் பென்சனியர்)*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் வந்து, எங்கள் துக்கத்தில் பங்குகொண்டோருக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.

ஓம் சாந்தி!

அன்பு மனைவி,
பெறாமகன்.

*'செல்வவில்லா',*
*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
(92525)


## ஐ.நா. அலுவலகம் தலிபான் வசம்

ஆப்கானிஸ்தானின் கண்டஹாரில் உள்ள ஐ.நா. அலுவலகங்கள் அனைத்தையும் தலிபான்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த அலுவலகங்களில் இருந்த தகவல் தொடர்பு 'இன்ரநெற்' வசதி ஆகியவை துண்டிக்கப்பட்டுள்ளன.

## பாகிஸ்தானிய தூதரகம் மூடப்பட்டது

ஆப்கானிஸ்தானில் உள்ள பாகிஸ்தானியத் தூதரக அதிகாரிகள் அனைவரையும் திருப்ப அழைத்துக் கொள்வதாக பாகிஸ்தான் நேற்று முன்தினம் தெரிவித்தது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரக அதிகாரிகள் திருப்பி அழைக்கப்படுவதாக பாகிஸ்தானிய வெளியுறவுத்துறை தெரிவித்தது.

## பின்லேடன் சொத்து அமெரிக்காவில் முடக்கம்

இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் மற்றும் அவரது 'அல்குயுதா' அமைப்பு சம்பந்தப்பட்ட அமெரிக்காவிலுள்ள சொத்துக்கள் அனைத்தையும் முடக்கி வைக்க அதிபர் புஷ் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறப்படும் 27 அமைப்புக்களின் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

## உலக அரங்கில்

## பாகிஸ்தானின் கடனை ரத்துசெய்ய அமெரிக்கா தயார்

வாஷிங்ரன்,செப்.26

பாகிஸ்தான் தமக்குச் செலுத்த வேண்டியுள்ள 379 மில்லியன் டொலர்கள் கடன் தொகையை ரத்துச் செய்வது குறித்து மீளாய்வு செய்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நீதிக்கான வரைமுறையற்ற நடவடிக்கைக்கு பாகிஸ்தானின் முழு ஆதரவைப் பெறுவதற்காக அமெரிக்கா எதனையும் செய்யத் தயாராகியுள்ளதையே இது காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## தலிபானுடனான உறவுகளை சவூதி துண்டிப்பு

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்களுடனான இராஜீக, வர்த்தக உறவுகளை சவூதி அரேபியா நேற்று முதல் துண்டித்துக் கொள்வதாக அறிவித்தது.

ஆனால், ஆப்கானிஸ்தான் மக்களுக்கு தான் எப்போதும் ஆதரவளிப்பதுடன், அங்கு அமைதியும் செழிப்பும் ஏற்படுத்தும் தனது உறுதிப் பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவிடம் மன்னிப்புச் சபை கோரிக்கை

நீதிக்கான வரைமுறையற்ற நடவடிக்கையை மேற்கொள்ளும் சமயத்தில், அமெரிக்கா சர்வதேச சட்ட திட்டங்களையும், மனித உரிமை விதிகளையும் மீறாமல் செயற்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை அமெரிக்க அதிபர் புஷ்ஷிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## ம.தி.மு.க. மூன்றாவது அணி அமைத்துப் போட்டி

சென்னை,செப்.26

தமிழகத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் மறுமலர்ச்சித் தி.மு.க. தனியாக மூன்றாவது அணியொன்றை அமைத்துப் போட்டியிடும் என்று, அக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், மத்திய அமைச்சருமான செஞ்சி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில், மத்தியில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம்வகிக்கும் தி.மு.கவை எதிர்த்து அதே கூட்டணியில் உள்ள ம.தி.மு.க. போட்டியிடத் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


## உளங்கனிந்த நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தீவுப்பகுதி மக்களுக்கான போக்குவரத்துச் சேவைக்கும் உள்ளூர், வெளியூர் உற்பத்திப் பொருள்களையும் மற்றும் உணவுப் பொருள்களையும் ஏற்றி இறக்கும் சேவைக்கும் மேற்படி சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய படகிற்கு ரூபா இருபது இலட்சத்தை உடனடியாக வழங்கி உதவியவர்களான



எமது அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ

**கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)

அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான உயர்திரு.

**க.மணிபல்லவராஜன்** *(ஜே.பி.யு.எம்.)*

(நிஷாந்தன்)

அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான உயர்திரு.

**ந.மதனராஜா** *(ஜே.பி.யு.எம்.)*

(மனோ)

அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவு அமைப்பாளரும் நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினருமாகிய உயர்திரு.

**க.நவநீதன்** (மோகன்)

அவர்களையும்

நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவர் உயர்திரு. புலவர்

**ஏ.டபிள்யூ. அரியநாயகம்** *(ஜே.பி.யு.எம்.)* அவர்களையும்


*மனமார வாழ்த்துவதோடு அவர்களின் சேவை மேன்மேலும் பல்லாண்டு காலம் சிறந்து ஓங்கி வளர வேண்டுமென நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*தலைமைச் செயலகம்,*
*பல நோ.கூ.சங்கம்,*
*நெடுந்தீவு.*
(92666)

உப தலைவர், இயக்குநர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 - 07 - 1916

உதிர்வு 26 - 09 - 2000

### திருமதி கந்தர் சேதுப்பிள்ளை

"அறத்தின் சின்னமே! மாண்புமிகு அன்னையே!!
மறைந்து ஓராண்டு சென்றதம்மா!
உன்னை மறந்து எம்மை வளர்த்தாயே! நாம்
உன்னை மறந்திருக்கும் நாளேது வாழ்வில்?"

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*
(92656)

# கோப்பாய்ப் பகுதியில் இரவில் ஒரே பாணியில் திருட்டுக்கள்

கோப்பாய், செப். 26

கோப்பாய்ப் பகுதியில் கடந்த வாரத்தில் அடுத்தடுத்து பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

ரொக்கப்பணம், தாலிக்கொடி, தங்கச்சங்கிலிகள், வானொலிப்பெட்டி போன்றவை பல வீடுகளிலும் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுக்கள் அனைத்தும் ஒரே பாணியிலேயே இடம்பெற்றுள்ளன.

வீட்டுக்கு மின் வழங்கும் பிரதான மின் மார்க்கத்தின் உருகி (பியூஸ்)யை கழற்றிய பின் உலக்கையால் ஜன்னல் கம்பிகளை வளைத்து சிறு பிள்ளையை உள்ளே நுழைய விட்டு வீட்டின் முக்கியவாயில் திறக்கப்பட்ட பின்னரே திருட்டுக்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் பீதியுடன் இரவைக் கழித்து வருகின்றனர்.

இவ்வாறான பல திருட்டுக்கள் குறித்து தற்போது கோப்பாய்ப் பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-72)


உ

இன்று தேர்ஏறி வருகின்ற வண்ணை
ஸ்ரீ வெங்கடேசவரதராஜப்பெருமாளின் கண்கொள்ளாக்
காட்சியைக் கண்டு களித்து அனைத்து மக்களும்
சகல சௌபாக்கியங்களையும் பெறவேண்டுமென
ஸ்ரீமந் நாராயணனை வேண்டுகிறோம்.

தரமான 22கரட் தங்க நகைகளுக்கு தயங்காமல் நாடுமிடம்:

**ஓம் முருகன் நகை மாடம்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

உரிமையாளர்:- பா. மூர்த்தி

கிளை:-

ஓம் சிவமகாலட்சுமி நகை மாடம்
176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக)

ஓம் மகாலட்சுமி நகை மாடம்
இருபாலைச் சந்தி, இருபாலை.

(92662)


அரசைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே அக்கறை

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதிக்கு அக்கறை இல்லை

## குற்றஞ்சாட்டுகிறார் ரெலோ எம். பி.

கொழும்பு, செப். 26

தனது அரசாங்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கெல்லாம் தலையசைக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிறிதும் அக்கறையில்லை. இதனாலேயே நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 17 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தைப் பகிஷ்கரித்தோம்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ரெலோ இயக்க முதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 17 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை பகிஷ்கரித்தமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

17 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பல ஆணைக் குழுக்களை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது. இந்த ஆணைக்குழுக்கள் அமைப்பதனால் இனப்பிரச்சினைக்கு எந்தவிதத் தீர்வையும் கண்டுவிட முடியாது.

இதனாலேயே நேற்று நடைபெற்ற இந்த விவாதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பகிஷ்கரித்தன.

கடந்த 50 வருட காலமாக கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிங்கள அரசுகள் எவற்றுக்குமே விருப்பமில்லை.

எந்தத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் அரசு நிறைவேற்றினாலும் யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்காத பட்சத்திலும் —

வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்படாத பட்சத்திலும் —

கொண்டுவரப்படும் மாற்றங்கள் அதிககாலம் நிலைத்து நிற்காது.

— இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4)

# கண்ணீர் அஞ்சலி

எமது தாதிய பயிற்சிப் பாடசாலை ஊழியர்
**திரு க. கணேசலிங்கம்**
அவர்களின் தந்தையார்

**அமரர் செல்லர் கார்த்திகேசு**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(92667) தாதிய பயிற்சிப் பாடசாலை

# இலவச பொது மருத்துவ முகாம்

வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினால் எதிர்வரும் 30.9.2001 ஞாயிற்றுக்கிழமை வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இலவச பொது மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது வைத்திய கலாநிதிகள் பலரும் வருகைதந்து சிகிச்சை அளிக்கப்படவுள்ளதால் நோயாளர்களைத் தவறாது வந்து சிகிச்சை பெறுமாறு வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகின்றது.

S. பத்மதாசன்.
செயலாளர்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
வாதரவத்தை.

விளம்பர அன்பளிப்பு-:

வீ. எம். கே. நகைமாடம்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(92670)

# கேள்விப்பத்திர அறிவித்தல்

இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரும், கேள்விச் சபைத் தலைவருமான என்னால் 2001-10-11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | நிறுவனத்தின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம். | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. | வலயக் கல்வித்திணைக்களம், வடமராட்சி. 90' 25' மூன்றுமாடிக் கட்டடம். | 750/- | 19,000/- |
| 02. | யா/நெல்லியடி ம. ம. வி. ஆசிரியர் பயிற்சி நிலையக் களஞ்சிய அறை. 20 'X10' | 250/- | 3,000/- |

01. மேற்படி வேலைகளில் முதலாவது வேலைக்கு இக்ராட் (ஐசீரீஏடி) நிறுவனத்தின் தரம் எம் -08 ம் அதற்கு மேற்பட்ட தரத்துக்குப் பதிவு செய்துகொண்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. இரண்டாவது வேலைக்கு இக்ராட் (ஐசீரீஏடி) நிறுவனத்தின் தரம் எம்-09 ம் அதற்குமேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
03. பொருள்கள் சேவைவரிக்கான (ஜீஎஸ்ரி) பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.
04. வேலைக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி எனப் பெயரிடப்பட்ட வங்கிக் கட்டளையினை ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே சமர்ப்பித்து 2001-10-01 ஆம் திகதி தொடக்கம் 2001-10-05 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வடமராட்சி வலயப் பாடசாலை வேலைகள் கிளையில் கட்டடப் பரிசோதகரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
05. கேள்விப்பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப் பிரதியும், இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடதுபுற மேல்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வித்திணைக்களம், வடமராட்சி, புலோலி என விலாசமிட்டு வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2001-10-11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்கூறிய கால நேரத்துக்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 2001 மார்கழி 31 ஆம் திகதிக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் உள்ள கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களைப் பாடசாலைக் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

சி. சிவராசா,
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வடமராட்சி.

பாடசாலைக் கட்டடவேலைக் கிளை,
வலயக் கல்வித்திணைக்களம்,
வடமராட்சி.
2001-09-24.

(சி/18388)

# அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை ரத்து

கனகரத்தினம் கனகசுந்தரம்
களபூமி, காரைநகர்
தற்போது இல. 102,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வழக்காளி

**வழக்கு இல. ஈடு/1850**

எதிராக

1. காலஞ்சென்ற கந்தசாமி யோகநாதன்
இல 93, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
எதிராளி

2. யோகநாதன் கைம்பெண் சூரியபிரபா
இல.93, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
இறந்த எதிராளியின் சட்டப்பிரதிநிதியாக பதிலிடப்பட்ட எதிராளி.

மேற்படி வழக்கு சம்பந்தமாக யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, இல. 93 இல் அமைந்துள்ள ஆதனத்தில் 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற இருந்த ஏல விற்பனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மன்றின் கட்டளைப்படி

து. சிறீமோகன்
பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

திகதி:- 24—09—2001

(92644)

உதயன்

## அமைச்சர் டக்ளஸ் ஏற்றுள்ள பொறுப்பு

உலர் உணவு நிவாரணப் பொருள்களின் தரம் பேணப்படுவது அவசியமாகும். இந்த நிவாரணப் பொருள்கள் நேரகாலத்திற்குப் பொதுமக்களுக்குச் சென்றடைவதும் முக்கியமானதாகும்.

- இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருக்கின்றார்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களைச் சேர்ந்தவர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், உதவி அரசஅதிபர்கள், அரசஅதிபர், கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்ட முக்கிய கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் நிவாரணப் பொருள் விநியோகம் தொடர்பான விடயத்தில் கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்துவரும் ஒரு கஷ்டநிலை குறித்து அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கஷ்டப்பட்ட மக்களுக்காக அரசு கொடுக்கும் நிவாரணம் இடையில் நிற்கும் தரகர்கள் மூலம் தட்டிப் பறிக்கப்படாமல் உறுதிசெய்யப்படுவது அவசியம்.

கொழும்பில் உள்ள பெரிய வர்த்தகர்களோடு சேர்ந்து சில அதிகாரிகள் தரமற்ற பொருள்களை நிவாரணத்துக்கு அனுப்பிப் பணத்தைச் சுருட்டிக்கொள்ளும் - கொள்ளை லாபமடிக்கும் - 'திருவிளையாடல்' இங்கு தொடர் கதையாகவே இருக்கின்றது. எனினும் இதுவரையும் யாரும் தண்டிக்கப்பட்டதாகவோ, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ இல்லை. இந்தத் திருகுதாளத்துக்கு அரசியல்வாதிகளும் பின்னணியோ என்ற சந்தேகமும் மக்களிடம் இல்லாமலில்லை.

இந்த விடயத்தில் பகிரங்கமாகப் பேசி, பொறுப்பேற்று, நிலைமையைத் திருத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இதுவரைகாலமும் உலர் உணவு நிவாரணப் பொருள்களின் விநியோகம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது இத்திணைக்களத்தினால் வடபகுதியில் செய்யப்படும் வேலைகள் தமது அமைச்சுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதாவது, வடபகுதியில் உலர் உணவு நிவாரண விநியோகம் சம்பந்தமான பணி, தனது அமைச்சின் கண்காணிப்பின்கீழ் வருவதாகத் தெரிவித்து அப்பணிக்குப் பொறுப்பேற்றிருக்கின்றார் அவர்.

எனவே இந்நடவடிக்கையில் ஏற்படக்கூடிய தவறுகளைக் கண்டுபிடித்து நீக்கி, தவறு நடக்காமல் பார்ப்பது அவரது அமைச்சின் பொறுப்பு. அத்தோடு இனிவரும் காலங்களில் இப்பணியில் ஏற்படக்கூடிய குளறுபடிகளுக்கும் அவரது அமைச்சே பொறுப்பேற்கவேண்டியிருக்கும்.

நிவாரணப்பொருள் விநியோகத்தில் இதுவரைகாலமும் குளறுபடிகள் நிகழ்ந்தமைக்கு முக்கியகாரணம், அதற்குப் பதில் - பொறுப்பு - சொல்லவேண்டிய கடமை யாருக்கும் - எந்த அதிகாரிக்கும் - இருக்கவில்லை என்பதுதான்.

நிவாரணப் பொருள் தரமற்றது என்பதால் அதை விநியோகிக்கும் கூட்டுறவுச் சங்கமோ களஞ்சியத்தின் பக்கம் கையைக் காட்டும். களஞ்சிய அதிகாரிகள் செயலக அதிகாரிகளைச் சுட்டிக் காட்டுவார்கள். செயலக அதிகாரிகளோ கப்பல், கொழும்பு நிர்வாகம் என்று கையைக் காட்டுவதோடு கதை முடிந்துவிடும்.

இந்தக் கதைகளுக்கு முடிவு கட்டுவதுபோல விடயத்தைப் பொறுப்பேற்றிருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ். எனவே இதுவிடயத்தில் அவரதும், அவரது அமைச்சினதும் பெயர் கெட்டுப்போகாமல் இருக்க, நிவாரணப் பொருள்கள் தரமாகவும், உரிய காலத்திலும், உரியவர்களுக்கும் விநியோகிக்கப்படுவதை அவர் உறுதிசெய்ய வேண்டியிருக்கும்.

அத்தோடு இன்னுமொரு விடயம்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பல்மூலம் எந்தப் பொதி அனுப்பப்பட்டாலும் அதில் கணிசமான - பெறுமதியான - பொருள்கள் இடைவழியில் சில பெருச்சாளிகளினால் சூறையாடப்பட்டுவிடுவது கடந்த அரை தசாப்த காலச் சரித்திரமாக உள்ளது.

ஏற்றப்படும் பொருளில் எவ்வளவு வந்து சேர்கின்றதோ அவ்வளவை மட்டும் கண்டுகொள்வதைத் தவிர, உரிமையாளர்களுக்கு வேறு வழியில்லை. கப்பலில் வரும் பொருள்கள் குறைவதற்கு பொறுப்பேற்க - பதில் சொல்ல - யாருமில்லை; யாரும் பதில் சொல்லத் தேவையில்லை என்ற நிலைமைதான் பல இரண்டு கால் பெருச்சாளிகளை இவ்வழியில் மேலும் மேலும் கொள்ளையடிக்கத் தூண்டுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனவே இவ்விடயத்திலும் பாதிக்கப்படும் மக்களின் குறைகளை உடனுக்குடன் கேட்டு, நியாயமான விசாரணை நடத்தி, இடைவழியில் சூறையாடுவோரைத் தண்டித்து, பாதிக்கப்பட்டோருக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க இதே அமைச்சு முன்வர வேண்டும்.

# பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஜி.ரி.இசற். விசேட திட்டம்

## விரைவில் நடைமுறைப்படுத்தும்

யாழ்ப்பாணம்,செப்.26

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்திடம் பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அந்த நிறுவனம் விசேட திட்டமொன்றை விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இவர்களுக்கு சுயதொழிற பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் என்பன வழங்கப்படும். அத்துடன் சிறுதொகைக் கடன்களை வழங்கி சுயதொழில் முயற்சிக்கு ஊக்கமளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் - இந்தத் திட்டத்தின் முன்னேற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் - ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4-ரி)

### வாழைச்சேனையில் படைமுகாம் மீது தாக்குதல்!

வாழைச்சேனை மீராவோடை முகாம் மீது நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்து பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையினரும் பதிலுக்குத் துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (ஒ-3)

## மீண்டும் வா!



ஊனுடல் உருக்கி உந்தன்
உளத்தினைத் தகழி ஆக்கி;
மானுட உயிரைத் தமிழர்
மானமாம் திரியாய் இட்டு;
பேனிடும் அகிம்சை ஓங்கு
பெட்புறு சுடரை ஏற்றி;
நானிடும் படிக்காய்ப் பாரத
நாட்டினைக் குனிய வைத்தாய்
ஒருதுளி நீரும் இன்றி
உன்னொளி பரப்பி; ஆன்மா
சீருற, ஞான வானாய்ச்
சித்தனாய்ப் பலவும் சொன்னாய்
பேறற யாவும் இங்கே
நீடுடன் நிலைக்கக் கண்டோம்
"ஆரிவர் தீவீயன்?" என்று
அகிலமே அதிர்ந்த தையா!
நீதியில் எலும்புக் கூடு
நிறையுயிர் பெய்த; மீண்டும்
வா! தமிழ் ஈழம் உந்தன்
வரவினைக் காத்து நிற்த.

- முருகனடியான்.

## விரைவில் வெளிவருகிறது 'படி-2' நூல்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உலக ஆசிரியர் தின வெளியீடான 'படி - 2' நூல் மிகவிரைவில் வெளிவரவிருக்கின்றது.

யாழ்.கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனின பதிவு, ஆசிரிய பயிற்சியின் தேர்ச்சிகள், உளப்பகுப்பாய்வில் கனவுகள், மனித விடுதலைக்கான கல்வி மற்றும் தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை பாலர் கல்வி ஆகிய அம்சங்களைத்தாங்கி இந்த இதழ் வெளிவரவிருக்கிறது.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராஜா எழுதிய 'ஆசிரிய ஐந்தொகை', கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீட பேராசிரியர் சோ.சந்திரசேகரம் எழுதிய 'கல்வியும் சமூக மேம்பாடும் ஒரு மாற்றுக் கருத்து', தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த ஜெயசேன புத்த பிட்டிய எழுதிய 'சிறந்த பாடசாலையும் ஆசிரியர் தொழில் வாண்மையும்', கல்வி உயர் கல்வி அமைச்சைச் சேர்ந்த எஸ். ஜலால்தீன் எழுதிய 'நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்' - ஆகிய விசேட கட்டுரைகளும் இந்த இதழில் இடம்பெற உள்ளன. (ம-4)

### நாளை

புரட்டாதி 11
வியாழக்கிழமை
திதி: தசமி
முற்பகல் 10.12 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் 10.20 வரை
சுபநேரம்: 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.26

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-4)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.25

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### உதயவாக்கு

சேற்றில் மாட்டிக்கொண்டவன் இன்னுமொருவனையும் அதில் இழுத்துவிடவே விரும்புகின்றான்.

## நாட்டு நடப்பு

*ஆறடிக்க முன்பு லைற் அவுட்டாய் போக*
*ஆச்சியும் அப்புவும் அடுக்களைக்குப் போக*
*'வாறனம்மா! கவனம்!' என்று வனிதா கத்த*
*'வரவேண்டாம்! அங்கே நில்!' என்று அன்னக்கா செப்பி*
*'போடுகிறேன் கோப்பி ஒன்று பொன்னருக்கு' என்று*
*போட்டாளே கோப்பி ஒன்று அன்னம் அக்கா*
*தேடி எடுத்த 'டப்பா' கோப்பித் தூளே என்று*
*திடமாக நம்பியெல்லோ போட்டாள் கோப்பி*
*இருட்டுக்கை அன்னமக்கா இட்ட கோப்பி*
*'மிளகாய்த்தூள் கோப்பி' என்று அறியாது*
*இட்டமுடன் வயிறளைய வயிற்றால் போக*
*இடர்பட்டுக் கிடக்கிறார் இருபதாம் வாட்டில்!*

***- விகடகவி.***

### பருத்தித்துறை மத்தியில்

# மருந்தகக் கட்டடம் அமைக்க அரச அதிபரால் காணி தெரிவு

வடமராட்சி,செப்.26

பருத்தித்துறை மத்திய மருந்தகத்துக்கான நிரந்தரக் கட்டடத்தை பருத்தித்துறை மத்தியிலுள்ள தெங்கக்கிணற்றடிக் காணியில் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பருத்தித்துறைக்கு விஜயம் செய்த யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி ஆகியோர் மேற்படி மருந்தகத்தை அமைப்பதற்கான பொருத்தமான இடம் குறித்து ஆய்வு மேற்கொண்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மருந்தகத்தை எங்கு அமைப்பது என்பது குறித்து சர்ச்சை நிலவிவந்தது தெரிந்ததே. (க-7-173)

# காரைநகர் மக்களுக்கு விரைவில் மற்றோர் இலவச மருத்துவ முகாம்

## நடத்தப்படும் என்கிறார் லயன்ஸ் பிரமுகர்

வலிகாமம் தெற்கு,செப்.26

வசதிக்குறைவுடன் வாழும் காரைநகர் மக்களின் நலனுக்காக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர், தீவக லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் முதன் முதலாகக் கடந்த 23ஆம் திகதி நடத்திய இலவச மருத்துவ முகாமில் கூடிய மக்கள் அனைவருக்கும் சிகிச்சை வழங்க முடியாது போனதால், அவர்கள் திரும்பிச் செல்ல நேரிட்டது. இவர்களுக்கான மற்றுமோர் இலவச வைத்திய முகாம் விரைவில் ஒழுங்குசெய்யப்படும்.

- இவ்வாறு இம்முகாமை ஒழுங்கமைத்த லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா தெரிவித்துள்ளார்.

காரைநகர் டாக்டர் ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த இலவச மருத்துவ முகாமில் 495 பேருக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசனால் விழிவெண்படலத்தால் பாதிப்புற்றமைக்கான கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

'கற்றாக்' முற்றிய நிலையில் காணப்பட்ட 27 பேர் உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் வைத்தியர் டாக்டர் எஸ்.ஜெயராசா 120 முதியவர்களுக்கு கண் பார்வைப் பரிசோதனைகளை மேற்கொண்டு, அவர்கள் பாவிப்பதற்குரிய மூக்குக் கண்ணாடிகளுக்கான சிபார்சுக் கடிதத்தை வழங்கினார்.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.பவானி 50 பெண்களுக்கு மகப்பேறு சம்பந்தமான பரிசோதனைகளை மேற்கொண்டு, வேண்டிய ஆலோசனைகளை வழங்கினார்.

பொது வைத்திய நிபுணர் டாக்டர் கே.மகேசன், 120 பேருக்கு டாக்டர் கே.ரட்ணசிங்கம், டாக்டர் செல்வி எவ்இருதயநாதன் ஆகியோரின் உதவியுடன் பொது மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்ட 87 பேர் இதன்போது இனங்காணப்பட்டனர்.

லயன்ஸ் கழகப் பிராந்தியத் தலைவர் லயன் ஆர்.நடராஜா, லயன் எஸ். எஸ்.அருளானந்தம், லயன் ரி. சற்குணராசா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)


**கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



காலின் கீழ் கிடந்த கண்ணி
கண்ணில் தெரியவில்லை!
கண்ணில் தெரிந்தபோது அதை
கருத்தில் பதிக்கவில்லை!
எல்லாம் உணர்ந்தபோது என் கால்
என்னிடம் இல்லை!

# வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய இரதோற்சவச் சிறப்பிதழ்

## பைநாகம் படுத்தானைப் பணிவோம்!

திருமாலை முதற் பரம்பொருளாக வைத்து வழிபடும் சமயம் வைஷ்ணவம், விஷ்ணுவுடன் சம்பந்த முடையது என்பதே வைஷ்ணவம் என்பதன் பொருளாகும். ஈழத்தில் சிறப்புற்று விளங்கும் வைஷ்ணவத் தலங்களில், யாழ்ப்பாண நகரின் மையத்தில் உள்ள வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் திவ்ய ஷேத்திரமாக விளங்குகின்றது. "ஈழத்துத் திருப்பதி" எனப் போற்றப்படும் இவ்வாலயத்தில் ஸ்ரீதேவி – பூமிதேவி சமேதரராக வெங்கடேச வரதராஜப் பெருமாள் பக்தர்களுக்கு அருள் பாலித்து, பக்த ரஷக மூர்த்தியாக விளங்குகின்றார்.





இவ்வாலயத்தில் புரட்டாதித் திருவோண நட்சத்திரத்தை தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. புரட்டாதி மாதம் கன்னி இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் மாதம். கன்னி இராசிக்குரியது புதன் கிரகம் ஆகும். புதன் – விஷ்ணு அம்சம் பொருந்தியது. எனவே இம்மாதம் விஷ்ணு மாதமாக கொள்ளப்படுகின்றது.

மேலும் திருவோண நட்சத்திரம் பெருமாளின் நட்சத்திரமாகக் கூறப்படுகின்றது. பெரியாழ்வாரும் தமது திருப்பல்லாண்டில் *"திருவோணத் திருவிழாவில் படுத்த பைநாகனைப் பள்ளி கொண்டானுக்கு பல்லாண்டு கூறுதுமே"* எனப் போற்றுகின்றார்.

எனவே பெருமாளிற்கே உரிய இந்தப் புரட்டாதித் திருவோணத்தை மையமாகக்கொண்டு மஹோற்சவம் நடைபெறுவதால் அவரின் அருள் பார்வைக்கு பக்தர் பத்திரமாதல் திண்ணம்.

இரதோற்சவ தினமாகிய இன்று, தேவியர் சகிதம் பகவான் தேரில் ஆரோகணித்து, மக்களின் மன அழுக்கை அகற்றி, சர்வ அலங்கார பூஜிதராய் வரும் காட்சி, இம்மை, மறுமைப் பயன்களைப் பெறத்தக்கது.

*"ஸர்வ தர்மான் பரித்திஜச்ச மாமேகம் சரணம் வ்ரஜ"* எனக் கீதையில் பகவான் கூறியது போல, எல்லாத் தருமங்களையும், பற்றற விட்டொழிந்து அவரை சரண் என்றடைதலே மேலான நெறி. இதுவே ஸ்ரீ வைஷ்ணவத்தின் உயர்ந்த பிரபக்தி மார்க்கமாகும். எனவே எல்லாம் வல்ல ஸ்ரீதேவி – பூமிதேவி சமேத வெங்கடேச வரதராஜப்பெருமாளின் பாதார விந்தங்களை சேவித்து, அனைவருக்கும் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*"ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்"*

**பிரம்மஸ்ரீ சாமி. சுந்தரேசக் குருக்கள்,**
*மஹோற்சவக் குருக்கள்.*

## தேர்மிசை வந்தெமக்குத் திருக்காட்சி தா!

**வண்ணை வரதராஜனே வரமருள வா!**
**வந்தே வளமான வாழ்வெமக்குத் தா!**
**கண்ணை இமை காப்பது போல் காப்பாயே நீ!**
**கண்ணா மணிவண்ணா கார் மேகனே வா!**
**மண்ணை உண்ட வாயானே மாயவனே வா!**
**தேர்மிசை வந்தமெக்குத் திருக்காட்சி தா!**
**வெண்ணை திருடித்தின்ற கண்ணனே வா!**
**வெங்கடேசப் பெருமாளே வா! வா!! வா!!!**

*- 'கவிமணி' சைவப்புலவர்*
*இராசையா ஸ்ரீதரன்.*

## ஆபத் பாந்தவனிடம் அபயம் கேட்போம்!

யாழ்.நகரின் மத்தியில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ தேவி – பூமிதேவி சமேத வெங்கடேச வரதராஜப்பெருமாளின் இரதோற்சவப் பெருவிழா இன்று சிறப்புற நடைபெறுகிறது.



மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்தவை ஆலயங்கள். அங்கு நடைபெறும் நித்ய, நைமித்ய கிரியைகள் யாவும் உலக ஷேமத்தின் பொருட்டு நடைபெறுகின்றன.

*"கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகிறான். கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்"*

என்னும் பாடல் வரிக்கேற்ப வேண்டிய வரங்களை வரையறாது வாரி வழங்கும் வள்ளலின் வடம் பிடித்து. வல்வினை போக்கிடுவோம். இந்நாளில் சகல இன மக்களும் சாந்தி, சமாதானம் ஏற்பட்டு சுபீட்ச வாழ்வு வாழ பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கிறோம்.

*"லோகா சமஸ்தோ சுகிநோ பவந்து"*

**ஸ்ரீவத்ஸ. வ. இராஜேஸ்வரக்குருக்கள்**
*பிரதமகுரு.*

### நன்றி.........

எம்பெருமாளின் திருவருளால் ஆலயத் திருப்பணிகளும் ஏனைய சேவைகளும் இனிதே - நன்றே நடைபெறுகின்றன. கோயிலுக்கான சேவைகளைச் செய்தமைக்காகவும் இந்தச் சிறப்பு மலரை வெளியிட உதவியமைக்காகவும் வணிகப் பெருமக்களுக்கும் அடியார்களுக்கும் எமது நன்றி.

*- தேவஸ்தானம்.*


**லக்ஷன் வீடியோ சென்ரர்**
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ அமலா ஜுவல்லர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிகா கலர் லாப்**
14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி நதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161A, கே.கே.எஸ். வீதி, (சத்திரத்துச்சந்தி)
யாழ்ப்பாணம்.

**சானுகா ஜுவல்லர்ஸ்**
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி மீனாட்சி தங்க மாளிகை**
இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/18391)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, செப் 26

வலிகாமம் வலய உடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

## 16 வயதுப் பிரிவு

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

## 18 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி. (ம-86)

★ ★ ★

வலிகாமம் வலய சங்கானை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

## 16 வயதுப் பிரிவு

★ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

★ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

★ மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி. (ம-86)

★ ★ ★

வலி. வடக்கு, செப். 26

வலிகாமம் வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

## 16 வயதுப் பிரிவு

★ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென். ஜோசப் கல்லூரி.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனிதஹென்றியரசர்கல்லூரி.

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம். (ம-82)


யாழ். போதனா வைத்தியசாலை

# சிற்றாலயத் திருநாள்

புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருநாளைக் கொண்டாடும் முகமாக இம்மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் ஆயத்த வழிபாடுகள் மாலை 4 25 மணிக்கு ஆரம்பமாகும்.

திருநாள் திருப்பலி 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு யாழ். ஆயர் அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆன்மகுரு.

(92664)


# தொண்டர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப் 26

வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் மூன்றும் நாளையும் இடம்பெறவுள்ள தேர், தீர்த்தத் திருவிழாக்கள் மற்றும் புரட்டாதிசனிவார உற்சவங்கள் ஆகியவற்றில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தொண்டர்கள் சேவை புரியவிருக்கின்றனர்.

இந்தச் சேவையில் பணியாற்ற வருமாறு இந்து இளைஞர் மன்றங்கள், பாடசாலை இந்து இளைஞர் மன்றங்கள் ஆகியவற்றின் தொண்டர்களை ஆலயத்தில் சமுகம் அளிக்கும்படி பேரவையின் தலைவர் கேட்டுள்ளார். (க-3)

# முன்பள்ளி ஆசிரியருக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப். 26

தென்மராட்சி மற்றும் பளைப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து கல்வி கற்பித்து வரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட உதவுதொகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது

'யுனிசெவ்' நிறுவனத்தினால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் வழங்கப்படும் இந்த உதவுதொகையை முதற்கட்டமாகப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களை குறிப்பிட்ட தினத்தில் வருகை தந்து இரண்டாம் கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார். (க-10-ரி)

# அபிவிருத்தித் தொண்டர்களாக மேலும் 420 பேர் விரைவில் தெரிவு

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் பனைவளம் சம்பந்தமான அபிவிருத்திப் பயிற்சிகளுக்கு என 420 அபிவிருத்தித் தொண்டர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலகங்களில் இருந்தும் இந்த அபிவிருத்தித் தொண்டர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கு பனம்பொருள் கைப்பணிப் பயிற்சிகள், பனஞ்தும்பு உற்பத்தி மற்றும் பனம் பொருள் உற்பத்திகள் பதனிடல் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதாகவும் —

இந்தப் பயிற்சிகளுக்குரிய பயிற்சியாளர்களைத் தெரிவு செய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் —

பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4)

# கோடா வைத்திருந்த இருவருக்கு 58 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

வலி. வடக்கு, செப். 26

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான கோடா மற்றும் கசிப்பு ஆகியவற்றை வைத்திருந்த இருவருக்கு 58 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட்டவர்களுக்கே நீதிவான் பா. சுப்பிரமணியம் மேற்படி தண்டனையை விதித்தார்.

சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த செபஸ்ரியன் தேவராசாவுக்கு 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா வைத்திருந்தமைக்காக 30 ஆயிரம் ரூபாவும் —

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த ஜெயம் நாகேஸ்வரிக்கு 50 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும், 15 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் வைத்திருந்தமைக்காக 28 ஆயிரம் ரூபாவும் —

தண்டமாக விதிக்கப்பட்டது. (ம-86)


# மரண அறிவித்தல்கள்

## சின்னையா அம்பிகாபதி

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அம்பிகாபதி 21 - 09 - 2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா— அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவகுமார் (ஜேர்மனி), அருட்குமார் (லண்டன்), பாலகுமார் (கொழும்பு), செல்வமலர் (சுவிஸ்), இராசமலர் (சுவிஸ்), சிவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி தம்பிஐயா சிதம்பரம், திருமதி தம்பு மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மட்டுவில் வடக்கு செட்டியார் கணபதிப்பிள்ளை—சின்னம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-09-2001) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
அ. சிவகுமார்
(மகன்)

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

(92673)

## கணபதிப்பிள்ளை இரத்தினம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினம் 22-09-2001 சனிக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை ஆகியோரின் இளைய மகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சிறிதரன் (சுவிஸ்), பவானி, திவாகரன் (சுவிஸ்), சிறிரஞ்சினி (சுவிஸ்), நித்தாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜீவகவிதா (சுவிஸ்), காலஞ்சென்ற இரவீந்திரராஜா மற்றும் ஆனந்தகௌரி (சுவிஸ்), குருபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், றிபானா, தர்ஷிகன், இளமதி, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி தம்பு, குட்டித்தம்பி மற்றும் மயில்வாகனம் (கண்டி), பொன்னு (டென்மார்க்), காலஞ்சென்ற இலட்சுமியம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற சிவரத்தினம் மற்றும் நேசமணி [இந்தியா] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26-09-2001) இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நிலாவரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தங்கரத்தினம்
(மனைவி)

நவக்கிரி,
புத்தூர்.

(92672)


# பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# கேள்வி அறிவித்தல்

2002-01-01 தொடக்கம் 2002-12-31 வரையான காலப்பகுதிக்கு கீழ் அட்டவணையிற் குறிப்பிடப்படும் குத்தகைகளை வழங்குவதற்கான கேள்விகள் 2001-10-12 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப் படிவங்கள் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணம், மீளளிக்கப்படமாட்டாத படிவக் கட்டணமும், பண்டங்கள் சேவைகள் வரியும் செலுத்தி இப்பணிமனையில் 2001-10-10 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பகாரர் எம்மால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகரித்த தொகைக்கே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தமது கேள்வித் தொகையின் 12 5 சதவீத தொகை பண்டங்கள் சேவைகள் வரியாக மேலதிகமாக சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

அட்டவணை

| கேள்வி விவரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கப்படக் கூடியபிணைப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | ப. சே. வரி |
|---|---|---|---|---|
| மரக்கறிச் சந்தை (கடைகள் நீங்கலாக) | 3,70,000/- | 3,500/- | 250/- | 31.25 |
| மீன் சந்தை | 2,50,000/- | 2,500/- | 250/- | 31. 25 |
| வான்வண்டிக்காலை | 1,01,500/- | 1,500/- | 250/- | 31. 25 |
| மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 1,38,000/- | 1,500/- | 250/- | 31. 25 |
| மாட்டிறைச்சிக் கடை | 4,63,000/- | 4,500/- | 250/- | 31. 25 |
| ஆட்டிறைச்சிக் கடை | 36,500/- | 1,500/- | 250/- | 31. 25 |
| கோழி இறைச்சிக்கடை | 15,000/- | 1,000/- | 250/- | 31. 25 |
| மரக்கறிச் சந்தையில் அன்பளிப்புத் தொகை, 15' / 10' தற்காலிக கடைகள் அமைத்து நடத்துதல் | | | | |
| இல. ஏ2 | 15,000/- | 1,000/- | 250/- | 31. 25 |
| இல. பி2 | 10,000/- | 1,000/- | 250/- | 31. 25 |

மேலதிக விவரங்கள் கடமை நாள்களில் கடமை நேரத்தில் பருத்தித்துறை நகராட்சி மன்றப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

ச. அன்ரன்கிறைசிஸ்
செயலாளர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நா. மணிவண்ணன்
தலைவருக்காக
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்.
பருத்தித்துறை.
2001—09—24

(சி/18393/)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வரியப்புலம், சுன்னாகம் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசமலர் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை இரண்டும் சுன்னாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(92658)

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறொயிலர் சகல நிறைகளிலும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். 1kg 150/=. சுத்தம் செய்யப்பட்டது 1kg 220/=. 1/4kg 60/=. செவ்வாய், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில். தொடர்பு: இல. 227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(92661)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். க.தனபாலசிங்கம் 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92655)

### கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் தனிப் பெற்றோலில் இயங்கிக் கொண்டிருக்கும் மொறிஸ்மைனர் 1100 cc கார் இலக்கம் 8ஸ்ரீ 6363 விற்பனைக்கு உண்டு. தினசரி காலை 10 மணிக்கு முன் பார்வையிடலாம். தொடர்பு: A. சிவராசா, கூழாவடி, (தபால் நிலையத்திற்கு அருகில்) ஆனைக்கோட்டை.
(92634)

### தவறிவிட்டது

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் தவமணி (கனகம்புளியடிச் சந்தி தேநீர்க் கடை) என்பவருடைய வி.அ.அட்டை (இல. 091033158)யும், ஆறுமுகம் சுபோதினி என்பவரின் விசேட அ.அட்டை (இல. 0910403975)யும் கப்பூதூக்கும் கரணவாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அருள்நாயகி கிறீம் ஹவுஸ், நெல்லியடியிலோ, தோரத் தம்பி வீரப்பதிராயன், கரணவாய் தெற்கு, கரவெட்டி என்ற முகவரியிலோ ஒப்படைத்துதவவும். (92660)

### ஏனைய கலைஞர்களும் திரும்பினர்

கடந்த ஜுலை மாதம் கலைப் பயணத்தை மேற்கொண்டு தென் பகுதிக்குச் சென்ற திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் 30 பேரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (ம-4)

## சேவைக்கான செயலமர்வுகள்


தென்மராட்சி,செப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8, 11 ஆகிய வகுப்புகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

தரம் 7 தொடக்கம், தரம் 11 வரையிலான வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான செயல்முறை செயலமர்வு ஒக்ரோபர் இரண்டாம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் -

நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அரியகுட்டி நாகரத்தினம்**

(குகன்)

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.)

மலர்வு 15-01-1917

உதிர்வு 26-09-1997

திதி: 12 – 10 – 2001

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.

(C/18390)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

26~09~2001

HAPPY BIRTHDAY



### செல்வன் மனோஷிகன்

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த

ஐங்கரன் - நாகேஸ்வரி தம்பதிகளின்

செல்வப் புதல்வன்

### செல்வன் மனோஷிகன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.09.2001) புதன் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பா, பெரியம்மா, அண்ணன், அக்கா, மச்சான்மார், மச்சாள்மார், பூட்டி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் மனோஷிகனை சகல செளபாக்கியங்களும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

*369/1, K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.* (92657)

தகவல்:-
சித்தப்பா (சசி)


நவீன டிசைன்களில், புதிய பாணியில் உங்கள் விருப்பத்துக்கேற்ப அசல் 22 கரட் தங்க நகைகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

ராஜ் நகையகம்


சங்கானை

உரிமையாளர்: திரு.கனக.குமாரசாமி அவர்கள்.

(92659)


## ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டம்

மறைந்த முன்னாள் பிரதமர்கள்



அமரர் **S.W.R.D.பண்டாரநாயக்கா**



திருமதி **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா**

இவர்களின் சிரார்த்த தினம் (26.09.2001) இன்றாகும். அதையொட்டி யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பானது இவர்களை நினைவு கூருமுகமாக அஞ்சலிக் கூட்டம் ஒன்றை இன்று (26.09.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடத்துகின்றது.

*தலைவர்:* உயர்திரு.R.சௌந்தரநாயகம் அவர்கள்
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - யாழ்.அமைப்பு - உபதலைவர்)

*இடம்:* கட்சிப் பணிமனை
முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

*அனைத்துப் பொதுமக்களையும் இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.*

- நிர்வாகம்
யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பு

(C/18389)

### திறந்தவெளிச் சிறையில் வாழ்ந்துவரும்

# யாழ்.குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு விடயத்தில் அக்கறையீனத்தைக் காட்டும் கட்டைப்பிராய் சம்பவம்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

திறந்தவெளிச் சிறையில் வாழ்ந்து வரும் யாழ்.குடாநாட்டு மக்களின் பாதுகாப்பில் ஸ்ரீலங்காப் படையினர் அக்கறையின்றிச் செயற்பட்டு வருவதையே கட்டைப்பிராயில் நடந்த கோரச் சம்பவம் எடுத்துக்காட்டியுள்ளது.

யாழ்.மக்களுக்கு பேரிடியாக அமைந்த இந்தச் சம்பவம் இனியும் தொடரக்கூடாது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இருபாலைப் பகுதியில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் ஓட்டோ ஒன்றில் பயணம் செய்த ஆறு அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானதுடன் ஓட்டோ சாரதி படுகாயங்களுக்கு உள்ளானார். இச்செய்தி அனைவரையும் கதிகலங்கச் செய்துவிட்டது.

யாழ்.குடாநாடு படையினரால் மீட்கப்பட்டு (ஆக்கிரமிக்கப்பட்டு) ஐந்து வருடங்கள் பூர்த்தியான நிலையில், வழமையாக மக்கள் பிரயாணம் மேற்கொள்ளும் இராணுவ காவலரண் அமைந்திருந்த பகுதியில் புதைந்திருந்த அமுக்கவெடியே அந்த ஆறு உயிர்களையும் குறிபார்த்ததாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் படையினர் மக்களது பாதுகாப்புத் தொடர்பாக சிறிதும் அக்கறையில்லாது இருந்து வருவதையே மீண்டும் ஒருதடவை தெளிவுபடுத்தியுள்ளது. இனியும் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருக்க உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

1995இற்கு முன்னர் மக்கள் எவ்வித அச்சமும் இன்றி சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டிருந்த காலம் மாறி நாளும் பொழுதும் மரண பயத்துடன் யாழ்ப்பாணத் திறந்தவெளிச் சிறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இந்தச் செய்தி பேரிடியாக அமைந்துள்ளது. இந்நிலை தொடரக்கூடாது. தொடரும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

அரசுக்கு முண்டுகொடுக்கும் தமிழ்க் கட்சிகள் இந்தக் கோரச் சம்பவத்தை தமது எதிர்கால அரசியல் பிழைப்புக்கான மூலதனமாக்கிக் கொள்ளாது தொடரும் யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கு சுயநலத்தை மறந்து செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது. (க-3)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமிகு சின்னையா மகேந்திரன்

(B.A. SLPS - I)

*(அதிபர், யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்)*

எமது அதிபர் திரு.சி.மகேந்திரன் அவர்கள் அதிபர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டு உளமார வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்,**
***யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்.***

(C/18396)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தரும்
எமது நிர்வாக சபை உத்தியோகத்தருமாகிய
**சிவராசா கிரிதரன்** அவர்களது அன்புத் தந்தையார்

## வேலுப்பிள்ளை சிவராசா

அவர்கள் 25.09.2001 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து நாமும் துயர் பகிர்ந்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

(92676)

---

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 19 ★ 11 ★ 1910

உதிர்வு: 27 ★ 08 ★ 2001

## அமரர் தம்பிஐயா கனகரத்தினப்பத்தர்

அன்புடையீர்!

27.08.2001 (திங்கட்கிழமை) சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் ஸ்ரீமான் தம்பிஐயா கனகரத்தினப்பத்தர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரிகைகள் இன்று 26.09.2001 புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு சங்கானையில் உள்ள இல்லத்தில் நடைபெறவும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், கிரிகைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-நன்றி-

நிரந்தர முகவரி:
"அன்னை அகம்"
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தற்போதைய முகவரி:
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

இங்ஙனம்
மக்கள்
க.குமாரசுவாமி (C.T.B)
க.நாகரத்தினம் (மணிப்பத்தர்)
(உரிமையாளர், மணி ஜுவல்லர்ஸ் & ஈசன் ஜுவல்லர்ஸ், பிரதான வீதி, சங்கானை)
க.திலகரத்தினம் (சுவிஸ்)

(C/18352)

---

### மருந்துகளை வெளியே வாங்க வேண்டிய அவலநிலை

தென்மராட்சி,செப்.26

மந்திகை ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர் பிரிவில் பனடோல், விட்டமின் சீ, பிரிட்டோன் போன்ற மருந்துகள் கையிருப்பில் இல்லாததால் சிகிச்சைக்குச் செல்லும் பொதுமக்களை தனியார் மருந்துக் கடைகளில் அவற்றை வாங்குமாறு அறிவுறுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

அவசர நோயாளர்களுக்கு ஏற்றப்படும் சேலைன், டெக்ஸ்ரோஸ் போன்றவையும் மந்திகை ஆஸ்பத்திரியில் இல்லாததால் தனியார் மருந்து நிலையங்களிலேயே அவற்றையும் வாங்கிப் பாவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-117)

---

# காணவில்லை

பருத்தித்துறை, தம்பசிட்டியைச் சேர்ந்த **திருமதி கந்தப்பிள்ளை சரஸ்வதி** (வயது 75) என்பவரைக் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் திருமதி வேலுப்பிள்ளை ஈஸ்வரி, நற்குணம் தொலைத் தொடர்பு நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்குத் தெரியப்படுத்தவும்.

தொலைபேசி இல. 070 - 213071

(C/18397)

---


# ராஜா யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், கமலஹாசன்,
மனோகர், ஸ்ரீபிரியா
மற்றும் பலர் நடிப்பில்

## அலாவுதீனும் அற்புதவிளக்கும்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)

(C/18274)

# நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜூன், மனிஷாகொய்ராலா,
ரகுவரன்
நடிப்பில்

## முதல்வன்

(ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(92671)


---

### பதவிகளைப் பறிகொடுத்த

# அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு கண்காணிப்பாளர் நியமனங்கள்?

கொழும்பு,செப்.26

அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் கிடைக்காதோருக்கு அமைச்சுக்களின் கண்காணிப்பாளர் பதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறியவருகிறது.

இந்தக் கண்காணிப்பாளர்களுக்கு அவர்கள் முன்பு வகித்த அமைச்சர், பிரதி அமைச்சர்களாகப் பதவிவகித்த போது கிடைத்த சம்பளத்தைத் தவிர ஏனைய அனைத்து சலுகைகளும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தக் கண்காணிப்பாளருக்கு சம்பளம் வழங்கப்படாது போனாலும் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் இருந்த காலத்தில் கிடைத்த கார், தொலைபேசி, அலுவலக வசதிகள் அனைத்தையும் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.(க-3)

---

# ஐ.தே.கட்சி எம்.பிக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## சபாநாயகர் சபையில் அறிவிப்பு

கொழும்பு,செப்.26

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடிய சமயம் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய சமயம் ரவிகருணாநாயக்க தமக்கு எதிராகத தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்போவதாக அவர் அறிவித்திருந்ததும் -

பண்டாரநாயக்க குடும்பத்தை விமர்சிக்கும் வகையில் பத்திரிகைகளுக்கு அவர் பேட்டிகளை அளித்திருந்ததும் தெரிந்தவையே. (க-3)

---

# பிரிவுத் துயர் பகிர்வு



## அமரர் இராஜா சேனாதிராஜா

எமது வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் **திரு.ச.இரவீந்திரா** அவர்களின் பாசமிகு மாமனாரான **அமரர் இராஜா சேனாதிராஜா** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஊழியர்கள்,**
**வர்த்தக வங்கி.**

(C/18395)

---

# அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 03 - 11 - 1926

மறைவு: 28 - 08 - 2001



## அமரர் சிவசம்பு வேலாயுதம்

28.08.2001 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து பல வழிகளிலும் எமது துக்கத்தில் பங்குகொண்டு உதவிகள் புரிந்தவர்களுக்கு எங்கள் நன்றியைப் பணிவன்புடன் சமர்ப்பிப்பதோடு -

நாளை (27-09-2001) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*அன்புக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவரே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!*

*விமானநிலைய வீதி,*
*தம்பாலை,*
*அச்சுவேலி.*

**- குடும்பத்தினர்.**

(92674)

யாழ். சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள

# திருநெல்வேலி வாசியை ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டுமா?

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவான் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருநெல்வேலியைச் சேர்ந்த மகேந்திரநாதன் சங்கரை ஆஸ்பத்திரியில் அனுமதித்துச் சிகிச்சை அளிக்க வேண்டுமா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.சட்ட வைத்திய அதிகாரிக்கு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராசா பணித்திருக்கிறார்.

சங்கர் தொடர்பாக நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றின் மீதே நீதிவான் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கடந்தவாரம் சங்கர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும் -

ஆனால் அவர் பூரண சுகமடைய முன்னரே சிறைச்சாலை அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரில் ஆஸ்பத்திரியில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றும் -

இரத்த அழுத்தம், நாரிநோ ஆகியவற்றால் அவஸ்தைப்படுவதாக சங்கர் தெரிவித்திருப்பதால் அவர் ஆஸபத்திரியில் தொடர்ந்து சிகிச்சைபெற அனுமதிக்க வேண்டும் என்றும் -

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை அடுத்தே -

ஆஸ்பத்திரியில் தங்கி அவர் சிகிச்சைபெற வேண்டுமா என அறிக்கை சமர்ப்பிக்கும்படி சட்ட வைத்திய அதிகாரிக்கும் -

ஆஸ்பத்திரியில் தங்கி அவர் சிகிச்சை பெறவேண்டும் என்று சட்ட வைத்திய அதிகாரி சிபார்சு செய்யும் பட்சத்தில் ஆஸ்பத்திரியில் அவரை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கும்படி சிறைச்சாலை அதிகாரிக்கும் -

நீதிவான் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

இதேவேளை - யாழ்.பல்கலைக்கழக மாணவன் இ.திவ்வியன் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (க-3-4)

# இரு பத்திரிகையாளருக்கும் விருது வழங்க வேண்டாம்

## வடக்கு - கிழக்கு ஆளுநர் அறிவிப்பு

திருகோணமலை,செப்.26

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் இருவருக்கு ஆளுநர் விருது வழங்க ஏற்கனவே முடிவாகியிருந்தது. ஆனால் அவர்கள் இருவருக்கும் விருது வழங்க வேண்டாம் என்று வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக ஆளுநர் மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

திருகோணமலையில் இந்த வாரத்தில் நடக்கவிருந்த இலக்கிய விழாவில் ஆளுநர் விருதுகள் வழங்க ஏற்பாடாகி இருந்தது. அந்த விருதுகளைப்பெற பெயர்கள் அறிவிக்கப்பட்டிருந்த 13 பேரில் இருவர் பத்திரிகையாளர்கள். ஒருவர் பி.மாணிக்கவாசகம் மற்றவர் ஜி.நடேசன்.

ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்துக்கு பத்திரிகைத் துறைக்கான விருதும் -

'இலங்கையின் இனத்துவ முரண்பாடுகள்' என்னும் நூலை எழுதிய ஊடகவியலாளர் ஜி.நடேசனுக்கு எழுத்தாளர்களுக்கான விருதும் - வழங்கப்படவிருந்தன. இவர்களுக்கே விருது வழங்க வேண்டாம் என்று தற்போது ஆளுநர் அறிவித்திருக்கிறார்.

இதேவேளை, இலக்கிய விழா ஒத்திவைக்கப்பட்டு விட்டது. இது குறித்த செய்தி 2ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. (க-9)

### புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

எனவே இந்திய அரசும் புலிகள் மீதான தடையை மறுபரிசீலனை செய்ய முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## செஞ்சிலுவையிடம் சடலம் ஒப்படைப்பு

கொழும்பு,செப்.26

மன்னார் மாவட்டத்தில் கண்ணாட்டியில் கடந்த 18 ஆம் திகதி படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் படையினரால் ஒப்படைக்கப் பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (க-3)

### புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரகாரம் உலக வங்கி வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்தாமல் 2002 ஆம் ஆண்டு வரை அவற்றை அரசு நிறுத்தி வைத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி சிபார்சுகளை அரசு நிறுத்தி வைததால் உலக வங்கி மூலம் கிடைக்கவிருக்கும் சுமார் ஆயிரத்து முந்நூறு கோடி ரூபா உதவித் தொகையை அரசு இழக்க வேண்டி வரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## தொல்புரம் வாசிக்கு உளிக் குத்து!

யாழ்ப்பாணம்,செப்.26

கடந்த ஒருவருடமாக இடம் பெற்றுவந்த கொடுக்கல்வாங்கல் பிரச்சினை, தச்சுவேலை செய்யப் பாவிக்கப்படும் உளிக் குத்தில் முடிந்தது.

தொல்புரத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மாரியன் நடராசா (வயது 40) என்பவரே உளிக் குத்துக்கு இலக்காகி விலாப் பகுதியில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சத்திர சிகிச்சை - அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை -

தேங்காய் பிடுங்குவதற்காகத் தென்னை மரத்தில் ஏறியவர் கீழே தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

சிறுப்பிட்டியில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் கணபதி தங்கராசா (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார். (க15)

### நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதால் இந்தப் போக்கில் அரசை இரண்டொரு மாதங்களுக்கு இயங்க விட்டுப் பார்த்தபின்னர், நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிப்பது நல்லது என அவர் அபிப்பிராயம் தெரிவித்ததாகவும் -

ஐ.தே.கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணியின் மூத்த தலைவர்கள் சிலர் தொடர்ந்து பொ.ஐ.முன்னணி அரசுக்கு முண்டுகொடுக்க முயற்சிப்பது குறித்து இந்த வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக இரு மாதங்களுக்கு முன்னர் இதே போன்றதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட சமயம் -

அப்போது பொ.ஐ.மு. அரசு புலிகளுடன் பேசலாம் என்ற காரணத்தைக் காட்டி "நம்பிக்கையின் ஒளிக்கீற்றுத் தெரிகின்றது. இந்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஒப்பமிட்டு அந்த ஒளிக்கீற்றைக் கலைக்க முடியாது" - என்று கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்ததும் -

பின்னர் தமிழர் தரப்பிலிருந்து கிடைத்த கடும் எதிர்ப்பு மற்றும் ஆட்சேபத்தை அடுத்து அவர் குத்துக்கரணம் அடித்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை முழுதாக ஆதரித்து நின்றதும் - தெரிந்தவையே.

இப்போது மீண்டும் அரசுக்கு முண்டுகொடுக்கும் சமிக்ஞைகள் கூட்டணியின் பக்கத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளன.

"இது தனி ஒருவர் எடுக்கும் முடிவல்ல. கூட்டணி உயர் பீடம் விரைவில் கூடி நல்ல முடிவை எடுக்கும். அதற்கு முன் யாரும் எந்த முடிவுக்கும் வரத்தேவையில்லை" - என்று கூட்டணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் - எதிர்க்கட்சிகளின் தரப்பிலிருக்கும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இன்னும் ஒப்பமிடவில்லை. எனினும் அக்கட்சி இப்பிரேரணையை முழுதாக ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

# மட்டு. ஆயர்குழு நேற்று கரிகாலனுடன் பேச்சு

மட்டக்களப்பு ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான சர்வமதக் குழு ஒன்று மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு நேற்றுச் சென்று திரும்பியது.

அங்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர் கரிகாலனுடன் இந்தக் குழு பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியது.

பலாத்காரமாக எவரையும் தமது அமைப்பில் சேர்த்துக்கொள்ளவில்லையென்றும் -

தாமாகவே விரும்பி எமது அமைப்பில் இளைஞர், யுவதிகள் இணைவதாகவும் -

கரிகாலன் இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார் என்று ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)

# அமெரிக்கரையும், யூதர்களையும் எங்கிருந்தாலும் தாக்குவோம்

## பின்லேடன் எச்சரிக்கை

உலகெங்கும் வாழும் அமெரிக்கர்களையும் யூதர்களையும் தாக்குவோம் என்று ஒஸாமா பின்லேடன் எச்சரிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

'அல்கைதா'வின் இராணுவத் தளபதியே பின்லேடன் சார்பாக இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்களைப் எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்பது எங்களுக்குத் தெரியும். புனிதப் போராளிகளான நாங்கள் எதையும் சந்திக்கத் தயாராக உள்ளோம்.

அமெரிக்கர்கள், யூதர்கள் எங்கிருந்தாலும் அவர்களைத் தாக்குவோம். உலகில் எந்தப் பகுதியில் வசித்தாலும் இஸ்லாமியர்கள் தங்களை இந்தப் போரில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இறைவனின் கருணையால் நிச்சயம் இந்தப் போரில் நாம் வெல்வோம்; இஸ்லாம் வெல்லும் - இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க-9)

# ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவிய பிரிட்டிஷ் விசேட படையணி

## பத்திரிகைகள் தகவல்

லண்டன்,செப்.26

ஆப்கானிஸ்தானில் வடபகுதியில் உள்ள தலிபான் எதிர்ப்புக் குழுவினருடன் பிரிட்டிஷ் விமானப்படையின் விசேட அதிரடி அணி இணைந்து செயலாற்றி வருவதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை தலிபான்களுடன் மோதலில் ஈடுபட்ட எதிரணிப் படைக் குழுவில் பிரிட்டிஷ் விசேட விமானப் படை அணியைச் சேர்ந்த சில வீரர்களும் இடம்பெற்றிருந்ததாக 'டெய்லி மெயில்' தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவியுள்ள பிரிட்டிஷ் உளவுப்படையினரும், அமெரிக்க மத்திய உளவுப் பிரிவினரும், ஒஸாமா பின்லேடனின் மறைவிடத்தை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் கூறியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் உளவுப் படையினர், சூடான், லிபியா, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள இரசாயன, உயிரியல், அணு ஆயுத தொழிற்சாலைகளை இனங்காணும் முயற்சியில் இறங்கியுள்ளதாக சண்டே எக்ஸ்பிரஸ் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இந்தச் செய்திகளைப் புறக்கணித்துள்ள பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு, அமெரிக்காவுக்கு எப்படி உதவுவது? என்பதே தற்போதைய யோசனை என்று தெரிவித்தது. (ஓ)

# பின்லேடன் சகோதரர்கள் பிரெஞ்சு நகரில் சந்திப்பு

இஸ்லாமியத் தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் சொந்தச் சகோதரர்கள் மூவர் பிரான்ஸின் கனாஸ் நகரில் கடந்த 15, 16ஆம் திகதிகளில் சந்தித்துப் பேசியதாக 'லீமொன்டே' என்ற பிரெஞ்சுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற வாரத்தின் இறுதி நாள்களில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்திருப்பது பலவித ஊகங்களை எழுப்பியுள்ளது.

1973ஆம் ஆண்டிலிருந்து சுவிற்சர்லாந்தில் வசித்துவரும் யெஸ்லம் பின்லேடன் (வயது 51) சவூதி அரேபியக் குடியுரிமை கொண்டுள்ள மோகமட் பின்லேடன் (வயது 54), இப்ராஹிம் பின்லேடன் (வயது 54) ஆகிய மூன்று சகோதரர்களே பிரானஸில் சந்தித்துப் பேசியவர்களாவர்.

இந்தச் சந்திப்புக் குறித்து பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டபோதும், குடும்ப வர்த்தக நிலைமை குறித்தே பின்லேடனில் சகோதரர்கள் ஒன்று கூடி விவாதித்ததாக லேடன் குடும்ப வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ)

ENGLISH SPOKEN & GRAMMAR
புதிய பிரிவு ஆரம்பம்
BY: BRITTO
இடம்: கொக்குவில் (ஞானபண்டிதா பாடசாலைக்கருகில்)
திகதி: 27.09.2001 (வியாழன்)
நேரம்: மாலை 3.30 (ப.நே.)
செவ்வாய், வியாழன்.
(C/18343)

வேலையாள் தேவை
எலக்ரோனிக் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளரும், கிட்டை எழுதுநரும் தேவை. அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: நேரில்
செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(92679)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம். இணுவில்.
DAY CLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
யாழ்ப்பாணம் - 01-10-2001 திங்கள் 8.00 (ப.நே.)
இணுவில் - 02-10-2001 செவ்வாய் 8.00 (ப.நே)
(92628)

A/L 2001 Day Class
கணக்கீடு
யாழ். நகர மாணவர்களுக்காக
NEW SCIENCE COLLEGE, Jaffna. நாளை 10.00 a.m.
SHAMROCK Temple Road, Jaffna. நாளை 11.00 a.m.
வலிகாம மாணவர்களுக்காக
NIRU TUITION CENTRE, Kondavil. நாளை 1.00 p.m.
VANI TUITION CENTRE, Chunnakam. நாளை 2.00 p.m.
வடமராட்சி மாணவர்களுக்காக
யங்றோயல்ஸ் சயன்ஸ் அக்கடமி, நெல்லியடி. நாளை 7.30 a.m.
"உங்கள் தேவைக்காக எனது சேவை"
வாரத்தில் 6 மணி நேர வகுப்புக்கள்
(92678)

ஆசிரியர்:- திரு.S.தவா
B.Com. (Hons) (Acc.Spl)
நாளைய உதயனில் எதிர்பாருங்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.